අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/5/7 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2018.02.09

சுற்றறிக்கை இலக்கம் : **4/2018**

அனைத்து மாகாணத் தலைமைச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் ∴ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து அதிபர்கள் ஆகியோருக்கு.

**கல்வி அமைச்சு மற்றும் டவர் மண்டபத் திரையரங்கு மன்றம் இணைந்து நடத்துகின்ற அகில இலங்கைக் குறுநாடகப் போட்டி – 2018 – (தமிழ் மொழி மூலம்)**

01 **அறிமுகம் மற்றும் நோக்கங்கள் :**

நாடகம் மற்றும் அரங்கியல் கலைகளைப், பாடசாலை மாணவ, மாணவியர்களின் ஆளுமை மற்றும் ஆக்கத்திறனை விழிப்படையச் செய்து, புத்துயிர் அளிக்கக் கூடிய கருவியாக உபயோகித்து, வகுப்பறைகளிலுள்ள எல்லைகளை விசாலப்படுத்திக் கொண்டு நாடகம் மற்றும் அரங்கியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கலைகளில் பங்கேற்புச் செய்து, சமகால செயற்பாடுகள் மூலமாக அறிவு, மனோநிலை, திறமை ஆகியவற்றை மேம்படுத்திக் கொண்டு நல்ல பழக்க வழக்கங்கள் நிரம்பிய திறமைமிக்க மாணவ சமூகத்தினுள், சமூகத்தின் ஒற்றுமை மற்றும் ஒழுக்க சீலமான தலைமைத்துவம், நற்பண்பு இயல்புகளைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்களை வழங்குவதுடன், எதிர்காலத்தில் அவர்களை ஆக்கபூர்வமான இரசனைப்புலன், அறிவுடைமை மற்றும் சீரிய பண்புகளுடன் திகழும் பிரசைகளாக உருவாக்கி தேசத்திற்கு வழங்கும் நோக்குடன், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் கல்வி அமைச்சு மற்றும் டவர் மண்டபத் திரையரங்கு மன்றம் ஒருங்கிணைந்து, 'அகில இலங்கைத் குறுநாடகப் போட்டி' எனும் பெயரில் வருடாவருடம் போட்டியொன்றை ஏற்பாடு செய்து நடத்துகின்றன.

இந்தப் போட்டியில் பங்குகொள்ளும் நாடகப் படைப்புக்களில் மாணவர்களின் பாடும், நடனமாடும், இசைக்கருவிகளை இயக்கும் மற்றும் நடிக்கும் ஆற்றல்கள் மற்றும் இதை ஒத்த வேறு செயற்பாடுகளில் கூட்டாகப் பங்குகொள்வதன் மூலமாக, அவர்களிடம் ஒழிந்துள்ள அழகியற்கலை ஆற்றல்கள் மற்றும் படைக்கும் திறமைகளை அவர்களே தெரிந்து கொள்வதற்கும், இந்த ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் இவற்றின் ஊடாக அவர்களுக்கு நன்மதிப்பும் அங்கீகாரமும் கிடைக்கச் செய்தல்.

02 **போட்டிகளின் தன்மை :**
இந்தப் போட்டிகளின் தன்மை கீழ்கண்டவாறு ஆகும்.

1. போட்டி : குறு நாடகம் (ஓர் அங்கம்) தமிழ் மொழி மூலம்

2:1 குறுநாடகப் பிரிவு (ஓர் அங்கம்)

மாணவர்களின் ஆளுமையை மேம்படுத்த உதவுகின்றதும், ஆச்சரியத்தைத் ஏற்படுத்தக் கூடியதும், மாணவர்களின் மனோநிலைக்குப் பொருத்தமானதும் ஆனால் குழந்தைகளுக்கான நாடகம் அல்லாததும், சுயமாக எழுதப்பட்டதும், ஓர் அங்கத்தைக் பார்த்து 31 நிமிடங்கள் காட்சிப்படுத்தக் கூடியதுமான நாடகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

03 போட்டி நடத்தப்படும் விதம் :

இந்தப் போட்டி கீழே தரப்படுகின்ற கட்டங்கள் மூலமாக செயற்படுத்தப்படும்.

3:1 கட்டம் ஐ – விண்ணப்பங்கள் கோருதல்

மாகாண அழகியற் கல்வி பணிப்பாளர்களினால் குறித்த சுற்றுநிருபம் மற்றும் விண்ணப்பப் பத்திரம் விநியோகிக்கப்படும் என்பதுடன், டவர் மண்டபத் திரை அரங்கு மன்றம் அல்லது டவர் மண்டபத் திரையரங்கு மன்றத்தின் உத்தியோக இணையதளம் (றறற.வழறநசாயடட.டம) ஊடாகவும் கல்வி அமைச்சின் உத்தியோக இணையதளம (றறற.அழந.பழஎ.டம) மூலமாகவும் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (நாடகத்தை நெறிப்படுத்துபவர் ஆசிரியராக இருக்க வேண்டுமென்பதால், விண்ணப்பங்களுக்கு விண்ணப்பிப்பதும் ஆசிரியர்களாக மட்டுமே இருத்தல் வேண்டும்.)

விண்ணப்ப பத்திரங்கள் முறைப்படி பூரணப்படுத்தப்பட்டு, அதிபரின் விதப்புரை மற்றும் அங்கீகாரத்துடன், குறித்த இறுதித் தினத்திற்கு முன் தங்களுடைய விண்ணப்பப் படிவங்களை, கீழை உள்ள முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் 2018 ஆம் ஆண்டு மார்த்து 31 ஆந் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் குறித்த விண்ணப்பப் படிவத்தின் பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்புதல் வேண்டும்.
**பணிப்பாளர் நாயகம், டவர் மண்டபத் திரையரங்கு மன்றம்**
**'சவ்சிரிபாய', இலக்கம் 123 விஜேராம மாவத்த, கொழும்பு 07.**

3:2 கட்டம் ஐஐ – ஆரம்பச் சுற்று
தயாரிக்கப்படுகின்ற நாடகங்களை அந்தந்தப் பாடசாலைகளில் வெவ்வேறாகவோ அல்லது பிரதேசத்திலுள்ள ஓர் அரங்கில் ஒரே தினத்தில் பல நாடகங்களை மேடையேற்றி அவற்றைப் பார்த்து மதிப்பிட்டு, இறுதிச் சுற்றுக்குப் பொருத்தமான நாடகங்களைத் தெரிவு செய்யும் பணி ஜூலை மாதத்தில் இடம்பெறுவதுடன், இந்தப் போட்டியில் நீதித்தீர்ப்பு வழங்கும் பணி, குறித்த துறையில் அதிகார பூர்வமான புலமையைப் பெற்றுள்ள நடுவர் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கட்டம் இறுதிச் சுற்றுக்குப் பொருத்தமான நாடகங்களைத் தெரிவு செய்கின்ற கட்டம் ஆகையால், முடிந்தளவு பரிபூரணமான தயாரிப்பாகக் குறித்த நாடகம் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதுடன், தங்களுடைய நாடகங்களை ஏதேனும் காரணங்களால் இந்தக் கட்டச் சுற்றுக்கு முன்வைக்க முடியாததாக இருக்குமெனில், இது குறித்து காட்சிப்படுத்துவதற்கு நியமித்த தினத்திற்குக் குறைந்தது 07 நாட்களுக்கு முன்னர், எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

3:3 கட்டம் ஐஐஐ – இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்தல்
இறுதிச் சுற்றுகுத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடகங்களின் நெறிப்படுத்துனர்கள் மற்றும் மேலதிக அங்கத்தின் கலைஞர் ஒருவர் ஆகியோருக்கு மூன்று நாள் வதிவிட வேலையரங்கு ஒன்று செயற்படுத்தப்படும். ஆதில் பங்கேற்புச் செய்கின்ற ஆசிரியர் பெருந்தகைக்கு எவ்விதக் கொடுப்பனவும் வழங்கப் படமாட்டாது.

3:4 கட்டம் ஐஏ - இறுதிச் சுற்று

ஒவ்வொரு அங்கத்திலும் அதிகமாகத் தயாரிப்புத் திறன்களை வெளிப்படுத்தி இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள அனைத்து நாடகங்களும் 2018 ஆம்

ஆண்டு ஜனவரி மாதத்தில் கொழும்பில் முக்கிய அரங்கம் ஒன்றில் தேசிய மட்டத்தில் ஒரே நாளில் நடத்தப்படவிருக்கின்ற விழாவின்போது மேடையேற்றப்படும் என்பதுடன், அப்போது, குறித்த துறையில் புலமைபெற்றுள்ள கற்றறிந்த கல்விமான்களைக் கொண்ட நடுவர் குழவினால் இந்த நாடகங்கள் தொடர்பான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுஇ வெகுமதிகள் மற்றும் கௌரவிக்கப்பட வேண்டிய படைப்புக்கள் மற்றும் படைப்பாளிகள் பற்றி விதப்புரையும் வழங்கப்படும்.

3.5 கட்டம் ஏ – கௌரவிப்பு மற்றும் வெகுமதிகள் வழங்கும் வைபவம்

ஆகில இலங்கைத் தமிழ்மொழி மூலமான குறுநாடகப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு வெகுமதிகள், கௌரவிப்புக்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் கௌரவிப்பு விழா, 2019ம் ஆண்டு பெப்புருவரி.'. மார்த்து மாதங்களில் தேசிய மட்டத்தில் டவர் மண்டபத் திரையரங்கு மன்றத்தின் மாண்புமிகு தவிசாளர் மாண்புமிகு பிரதம அமைச்சர், கல்வி அமைச்சர், பிரபல கலைஞர்கள் மற்றும் மாண்புமிகு விருந்தினர்களின் பங்கேற்பில் கொழும்பில் நடைபெறும்.

04 பொதுவான நிபந்தனைகள்

4:1 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் "போட்டோ" பிரதியை உபயோகித்து, ஒரு பாடசாலைக்குப் போட்டியில் பங்கேற்புச் செய்ய விண்ணப்பிக்க முடியும். ஒரு பாடசாலை ஒரு நாடகத்தை மட்டுமே முன்வைக்க முடியும்.

4:2 ஒவ்வொரு தயாரிப்பிலும் பங்கேற்புச் செய்யும மாணவர்களின் எண்ணிக்கை மேடையில் சம்பாித்து நடிக்கும் மூனறு பேர்களுடன் (மேலதிகக் கலைஞர் தவிர) ஆகக் கூடிய எண்ணிக்கை 40க்கு மேற்படக்கூடாது. (மேலதிக அங்க கலைஞர்கள் உட்பட)

4:3 இந்தப் போட்டிக்கு விண்ணப்பம் செய்துள்ள ஒருவர், ஏதேனும் காரணத்தால் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டிருப்பார் எனில் இரண்டு பாடசாலைகளின் அதிபர்களின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு, விண்ணப்பதாரர் தான் விரும்பிய பாடசாலையிலிருந்து தன்னுடைய நாடகத்தை முன்வைக்க முடியும். இது தொடர்பாக குறித்த இரண்டு அதிபர்களின் சம்மதத்தை எழுத்து மூலமாக அவர்கள் இருவரின் ஊடாக, டவர் மண்டபத் திரையரங்கு மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4:4 வேறு நாடகப் போட்டிக்கு தான் முன்வைத்த எந்த ஒரு நாடகத்தையும் இந்தப் போட்டிக்கு முன்வைத்தல் கூடாது. அத்துடன் வேறு நபர்களின் நாடகப் பிரதி அல்லது சீர்சிதைக்கப்பட்ட நாடகப் பிரதியொன்றை வஞ்சகமான முறையில் சமர்ப்பித்திருந்தால் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்து போட்டியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாதலால், இவ்வாறான செயல்களிலிருந்து முற்றிலும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

4:5 இந்தப் போட்டியின் இறுதிச் சுற்று நிறைவு பெறும் வரையிலும் வேறு எந்த ஒரு போட்டிக்கும் இந்த நாடகப் பிரதியை அல்லது தயாரிப்பை முன்வைத்தல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

4:6 தன்னுடைய நாடகத்தில் நடிப்பு மற்றும் பாடல்களுக்கு தன்னுடைய பாடசாலை மாணவ மாணவியர்களை மட்டுமே விண்ணப்பதாரர் பங்கேற்புச் செய்ய நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். வேறு மேலதிக செயற்பாடுகள் சம்பந்தமாக தன்னுடைய மாகாணத்திலுள்ள வேறு பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும், இரண்டு பாடசாலை அதிபர்களின் எழுத்திலான அனுமதியுடன் மட்டுமே ஈடுபடுத்திக் கொள்ள முடியும். ஒவ்வொரு நாடகத்தின் நெறிப்படுத்துபவர்

ஆசிரியராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பிரதி ஆக்கத்தில் குறித்த பாடசாலையின் ஆசியர் ஒருவர் அல்லது மாணவ ∴ மாணவியர் ஈடுபட்டுக்கொள்ள முடியும்.

4:7 வெகுமதிகள் மற்றும் கௌரவிப்பு வழங்கும் விழாவில் பங்கேற்புச் செய்கின்ற மாணவ மாணவியர்கள் பாடசாலைச் சீருடை அணிந்தும், ஆசிரியர்கள் விழாவை மதிக்கும் பொருட்டு பொருத்தமான ஆடை அணிந்து வருகை தருதல் கட்டாயமாகும்.

4:8 போட்டியை ஏற்பாடு செய்தல், நடுவர் குழுவை நியமித்தல், நடுவர் தீர்ப்புக்கள் தொடர்பாகத் தோன்றுகின்ற பிரச்சினைகளிலிருந்து கல்வி அமைச்சு முற்றிலும் விடுபட்டு இருக்கும். போட்டி நிபந்தனைகளை மீறுதல் சம்பந்தமாக அல்லது போட்டி ஏற்பாட்டு விடயங்கள் தொடர்பாக அனைத்துத் தீர்மானங்களையும் எடுக்கும் பொறுப்பு, டவர் மண்டபத் திரையரங்கு மன்றத்தைச் சார்ந்திருக்கின்றது என்பதை விண்ணப்பதாரர்கள் விவாதமின்றி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4:9 இந்தப் போட்டியில் நடுவர் குழுவினால் வழங்கப்படும் தீர்ப்புக்கள் இறுதியானதும் முடிவுமானதாக அமையும்.

## 05 வெகுமதிகள் மற்றும் கௌரவிப்பு வழங்குதல்

5:1 இந்த போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குக் கீழே தரப்பட்டவாறு வெகுமதிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| சிறந்த சங்கீத நெறியாள்கை | ரூபா 10,000.00 |
| சிறந்த மேடை பின்னணி அமைப்பு | ரூபா 10,000.00 |
| சிறந்த ஆடை அலங்காரம் | ரூபா 10,000.00 |
| சிறந்த ஒப்பனை | ரூபா 10,000.00 |
| சிறந்த துணை நடிப்பு (நடிகை) | ரூபா 10,000.00 |
| சிறந்த துணை நடிப்பு (நடிகன்) | ரூபா 10,000.00 |
| சிறந்த நடிப்பு (நடிகை) | ரூபா 15,000.00 |
| சிறந்த நடிப்பு (நடிகன்) | ரூபா 15,000.00 |
| சிறந்த நாடகப் பிரதி 3ஆம் இடம் | ரூபா 7,500.00 |
| சிறந்த நாடகப் பிரதி 2ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| வருடத்தின் சிறந்த பிரதி | ரூபா 15,000.00 |
| வருடத்தின் சிறந்த நெறியாள்கை | ரூபா 20,000.00 |
| சிறந்த தயாரிப்பு 3ஆம் இடம் | ரூபா 20,000.00 |
| சிறந்த தயாரிப்பு 2ஆம் இடம் | ரூபா 25,000.00 |
| வருடத்தின் சிறந்த தயாரிப்பு | ரூபா 30,000.00 |

5:2 இறுதிச் சுற்றில் பங்கேற்புச் செய்கின்ற ஒவ்வொரு நாடகத்தின் நாடக நெறியாள்கையை மேற்கொண்ட ஆசிரியருக்கு, பங்கேற்புச் செய்தமைக்காக ரூபா 7,500.00 வெகுமதி வழங்கப்படும்.

5:3 விசேட திறமையை வெளிப்படுத்துகின்ற நபருக்கு, அதிசிறந்த திறமைக்கான பாராட்டு அல்லது திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

5:4 இறுதிச் சுற்றில் பங்கேற்புச் செய்கின்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் பங்கேற்புச் செய்தமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கல்வி அமைச்சு மற்றும் டவர் மண்டபத் திரையரங்கு மன்றம் இணைந்து நடத்துகின்ற இந்தப் போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்யத் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மிகவும் மதிக்கின்றேன்.

செயலாளர்
கல்வி அமைச்சு

| மாகாணம் | இலக்கம் |
|---|---|
| | |

# கல்வி அமைச்சு

மற்றும்

# டவர் மண்டபத்திரை அரங்கு மன்றம்

அகில இலங்கைத் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கான குறுநாடகப் போட்டி – 2017

## விண்ணப்பப் படிவம்

போட்டிப் பிரிவு : ..........................................................................................................
நாடகத்தின் பெயர் : ..........................................................................................................
பாடசாலையின் பெயர் : ..........................................................................................................
மாகாணம் : .................................................................. மாவட்டம் : ...............................

01. விண்ணப்பதாரரின் பெயர் : திரு.'.திருமதி ..........................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
முகவரி : ..........................................................................................................
..........................................................................................................
தொலைபேசி இலக்கம் : வதிவிடம் .................................. கையடக்க ..................................

02. பிரதி எழுதியவரின் பெயர் : திரு.'.திருமதி ..........................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
முகவரி : ..........................................................................................................
..........................................................................................................
தொலைபேசி இலக்கம் : வதிவிடம் .................................. கையடக்க ..................................

03. நெறிப்படுத்தபவரின் பெயர் : திரு.'.திருமதி ..........................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
முகவரி : ..........................................................................................................
..........................................................................................................
தொலைபேசி இலக்கம் : வதிவிடம் .................................. கையடக்க ..................................

04. சங்கீதம் நெறிப்படுத்துபவரின் பெயர் : திரு.'.திருமதி ..........................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
முகவரி : ..........................................................................................................
..........................................................................................................
தொலைபேசி இலக்கம் : வதிவிடம் .................................. கையடக்க ..................................

05. பாடசாலையின் முகவரி : ..........................................................................
தொலைபேசி இலக்கம் : ..........................................................................

06. வலயக் கல்வி அலுவலகம் மற்றும் முகவரி : ..........................................................................
..........................................................................................................
தொலைபேசி இலக்கம் : ..........................................................................

07. பாடசாலைக்கு அண்மித்துள்ள முக்கியமான நகரம் : ..........................................................................

08. முக்கிய நகரத்திலிருந்து பாடசாலைக்கான தூரம் : ..............................................................................

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உரிய அளவு உண்மையானவை எனவும். போட்டிக்கான நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு இந்த நாடகம் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகிறது எனவும், இந்த நாடகப் பிரதி வேறு எவராலும் இதற்கு முன்னர் எழுதப்பட்டதோ அல்லது நெறிப்படுத்தப்பட்டதோ அல்லது இலங்கையில் எந்த ஒரு நாடகப் போட்டிக்கும், எந்த மட்டத்திலாவது முன்வைக்கப்பட்ட நாடகப் பிரதியோ இல்லையென உறுதிப்படுத்தி வெளிப்படுத்துவதுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது என இந்த நாடகப் போட்டியின் எந்த ஒரு கட்டத்திலும் தெரியவருமானால், மேலே கூறப்பட்டுள்ள நாடகத்தை இந்தப் போட்டியிலிருந்து அகற்றி விடுவதற்கு டவர் மண்டபத்திரையரங்கு மன்றத்திற்கு உள்ள உரிமையை ஏற்றுக்கொள்வதுடன், இந்த நாடகம் தொடர்புடைய அனைத்துக் கலைஞர்களும் குறித்த நிபந்தனைகளுக்கு ஏற்பத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எனவும், இந்த தயாரிப்பில் நடிப்பில் பங்குகொண்டுள்ள அனைவரும் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் எனவும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகின்றேன்.

.......................................

திகதி

..................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

மேலே தரப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப இந்த நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த நாடகத்தில் நடிப்பில் பங்கு கொள்ளுகின்ற அனைத்து மாணவ மாணவியர்களும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்பவர்கள் எனவும், இந்த நாடகத்தின் விண்ணப்பதாரர், மற்றும் நாடகத்தை நெறிப்படுத்தியவர் இந்தப் பாடசாலை ஆசிரியர் குழாத்தைச் சேர்ந்தவர் எனவும், விண்ணப்பம் என்னுடைய பூரண அனுமதியுடன் முன்வைக்கப்படுகின்றது எனவும், நாடகத்தைத் தயாரித்து முன்வைப்பதற்கான அனுமதியையும் அனுசரணையையும் வழங்குவதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.....................................

திகதி

....................................................

அதிபரின் பெயர்
அலுவலக முத்திரை

....................................................

அதிபரின் கையொப்பம்